**செ.கு.எண் :94** **நாள் : 09.12.2022**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, எழிலகத்திலுள்ள மாநில அவசர செயல்பாட்டு மையத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி.**

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்:** மக்களின் பாதுகாப்பிற்காக எல்லாவித நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டு இருக்கிறேன். அதுமட்டும் இல்லாமல் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மானிட்டரிங் ஆபிசர் ஐஏஎஸ் அதிகாரிகள் நியமிக்கப்பட்டு அவர்களும் அந்தந்த பகுதிகளுக்கு சென்று கவனித்து, என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே எவ்வளவு மழை வந்தாலும் எவ்வளவு காற்றடித்தாலும் அதை சமாளிப்பதற்கும், அதிலிருந்து மக்களை காப்பதற்கும் இந்த அரசு உரிய நடவடிக்கைகளை தொடர்ந்து எடுத்து வருகிறது.

கேள்வி: மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் பேசினீர்களே, நிலைமை எப்படி இருக்கிறது என்று தெரிவித்தார்கள்?

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதில்** : சில முகாம்களில் மக்கள் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள், சில முகாம்களில் தங்க வைக்கப்பட வேண்டிய சூழ்நிலை வரவில்லை. மக்களுக்கு உரிய வகையில் எச்சரிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது, மக்களும் அதற்கு ஒத்துழைப்பு கொடுக்கிறார்கள்.

கேள்வி: பொதுமக்களுக்கு என்ன தெரிவிக்க விரும்புகிறீர்கள்?
**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதில்:** பொதுமக்கள் அரசு மூலமாக எடுக்கப்படும் எல்லா நடவடிக்கைகளுக்கும் முழு ஒத்துழைப்பு தந்தால், சூழ்நிலையை வெற்றிகரமாக கையாளலாம்.

************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in